நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
18.01.2022

# அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் சிறப்பு விசாரணைக் குழு அமைக்க வலியுறுத்தல்

**மதுரை, ஜன. 18:** செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாக, அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் மூத்த பெண் வழக்குரைஞர்கள் தலைமையில் ஆய்வு நடத்தி, சிறப்பு விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என மக்கள் கண்காணிப்பகம் வலியுறுத்தியது.

மதுரையில் மக்கள் கண்காணிப்பகத்தின் நிர்வாக இயக்குநர் ஹென்றி திபேன் செய்தியாளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது:

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் 17 வயதான சிறுவன் கடந்த மாதம் 31 -ஆம் தேதி அங்குள்ள ஊழியர்களால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இதுதொடர்பாக, 176 (1ஏ) சட்டப் பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், சிறுவனின் தாய் கடந்த 11 -ஆம் தேதி அளித்த புகாரின் பேரில், மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் விரைந்து நடவடிக்கை எடுத்து கொலை வழக்காகப் பதிவு செய்து, ஊழியர்கள் 7 பேரை கைது செய்தது.

இந்தச் சம்பவத்தில் சிறுவனின் தாயை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் சிவக்குமார் கடத்திச் சென்று புகார் அளிக்கவிடாமல் அடைத்து வைத்ததால், புகார் அளிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இதுதொடர்பாக மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அலுவலர் சிவக்குமார் மீதும் புகார் அளிக்கப்பட்டது. அவர் தற்போது வரை கைதுசெய்யப்படவில்லை. அவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும்.

மேலும், இதுதொடர்பாக செய்திகள் வெளியான நிலையில், சமூக நீதித் துறை அதிகாரி வளர்மதி செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்துக்கு இரண்டு வாரம் தாமதமாக கடந்த 14-ஆம் தேதி சென்று விசாரித்தார். ஆனால், இதுவரை விசாரணை அறிக்கையை அவர் தாக்கல் செய்யவில்லை. மேலும், கூர்நோக்கு இல்லத்தில் நடக்கும் சித்திரவதைகளுக்கு காரணமான நபர்களையே உடன் அழைத்துச் சென்றுள்ளார். கூர்நோக்கு இல்லத்துக்கு சென்று உயர்நீதிமன்றம் பல்வேறு வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. இவை எதுவும் பின்பற்றப்படவில்லை.

செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லத்துக்கு அரசு சார்பில் வாகனம் வழங்கப்பட்டிருந்தும், தாக்குதலில் உயிரிழந்த சிறுவனின் சடலத்தை அவசர ஊர்தியில் கொண்டு செல்லாமல் இரு சக்கர வாகனத்தில் கொண்டு சென்றனர். இதுதொடர்பாக அரசு விசாரணை நடத்த வேண்டும். மேலும், செங்கல்பட்டு கூர்நோக்கு இல்லம் மட்டுமன்றி, தமிழகம் முழுவதும் உள்ள கூர்நோக்கு இல்லங்களில் சிறுவர்கள் சித்திரவதைப்படுத்தப்படுகின்றனர்.

எனவே, உயர்நீதிமன்ற மூத்த பெண் வழக்குரைஞர்கள் தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அமைத்து, அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் விசாரணை நடத்த அரசு உத்தரவிட வேண்டும். இந்தக் குழுவில் மருத்துவர்களும் இடம் பெற வேண்டும்.

சிறுவனின் தாய் கணவரை இழந்தவர். இவருக்கு மேலும் 5 குழந்தைகள் உள்ள நிலையில், அவர்களை மிகவும் சிரமப்பட்டு வளர்த்து வருகிறார். எனவே, கூர்நோக்கு இல்லத்தில் காவல் மரணம் ஏற்பட்டுள்ளதால், சிறுவனின் குடும்பத்துக்கு ரூ. 10 லட்சம் இழப்பீடும், அவரது தாய்க்கு அரசு வேலையும் வழங்க வேண்டும்.

சிறுவனின் மரணம் தொடர்பாக நீதி விசாரணைக்கு அரசு உத்தரவிட்டு, இதில் தொடர்புடையவர்கள் மீதும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.